விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 32 ரம்ழான் 24 இதழ் 124
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14-6-1985

ஈரற்பெரிய குளம்

## ராணுவ முகாமில் 200 சிங்களக் குடும்பங்கள்!

[கொழும்பு]

வன்னி-அநுராதபுர மாவட்டங்களின் எல்லைப்பகுதியில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து இருநூறுக்குமதிகமான சிங்களக் குடும்பங்கள் ஈரற்பெரியகுளம் இராணுவமுகாமில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளன.

பாவற்குளம் பகுதியில் இச்சிங்களக் குடும்பங்களைப் பயமுறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனையடுத்தே இவை ஈரற்பெரியகுளம் இராணுவ முகாமில் தஞ்சமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

இராணுவ முகாமில் இவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த அகதிகள் விரும்பும் பட்சத்தில் இவர்களை இன்று அநுராதபுரம் அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய அசம்பாவிதங்

(8-ம் பக்கம் பார்க்க)

### லலித் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்து

(8-ம் பக்கம் பார்க்க)

★ இன்று இந்தியா செல்லும் இலங்கைக் குழு

# வடக்கு - கிழக்குக்கு தனியான அரசமைப்புக்குறித்து ஆராயும்!

(இ. கந்தசாமி)

**இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கென தனியான அரசமைப்பொன்றை உருவாக்குவது குறித்து திரு.எச்.டபிள்யு ஜயவர்த்தன தலைமையில் இன்று இந்தியா செல்லும் உயர்மட்டக்குழு இந்திய சட்ட அறிஞர்களுடன் கலந்தாலோசிக்கும்.**

இந்திய சட்டமா அதிபர் திரு. பரசுரன், சட்ட அமைச்சர் திரு அசோக்சென் மற்றும் இந்திய உயர் சட்ட அறிஞர்களுடன் இலங்கைக்குழு இதுகுறித்து விரிவாக ஆரா யும். இந்திய-இலங்கைஉயர்மட்ட

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். - கொழும்பு

## ரயில் சேவை இன்று மீண்டும் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி இன்று முதல் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரயாணம் செய்வோர் யாழ். ஸ்ரேடியத்திலிருக்கும் தபாலகத்திற்கு அருகில் உள்ள புகையிரதப்பகுதி அறையில் டிக்கட்டுக்கான பணத்தைச்

(8ம் பக்கம் பார்க்க)

தாயகம் திருப்பி அனுப்பப்படும்

## இலங்கை தமிழ் அகதிகளுக்கு துன்புறுத்தல்கள் இருக்காது!

### பிரிட்டிஷ் அரசு உறுதி

(லண்டன்)

''பிரிட்டனிலிருந்து தாயகம் திருப்பி அனுப்பப்படும் இலங்கைத் தமிழ் அகதிகள் எந்த வகையிலும் துன்புறுத்தப்படமாட்டார்கள். அவர்கள்மீது எக்காரணம் கொண்டும் வழக்குத் தொடரப்படமாட்டாது'' என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுமக்கள் சபைக் கூட்டத்தின்போது பிரிட்டிஷ் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பிரிட்டன் செல்லும் தமிழர்கள்பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பப்படுவது தொடர்

(8ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளுடன் பேசும்படி 'சூசை'க்கு 'அமிர்' பணிப்பு

(சென்னை)

இலங்கை எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளைமேற்கொண்டு அதுசம்பந்தமான விரிவான அறிக்கை ஒன்றை கூட்டணி அரசியல் குழுவிடம் சமர்ப்பிக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் யன்னார் முன்னாள் எம்.பி. திரு. பி. எஸ். சூசைதாஸ

(8ம் பக்கம் பார்க்க)

## சுவிஸ்லில் ஆற்றில் நீராடியவர் மரணம்!

[வண்ணார்பண்ணை]

சுவிற்சர்லாந்திலுள்ள ஆறு ஒன்றில் நீராடச்சென்ற இலங்கை இளைஞர் தருமலிங்கம் ஞானசேகரம் (வயது 28) ஆற்றில் அள்ளிச்செல்லப்பட்டு

(8ம் பக்கம் பார்க்க)

★ குருநகர் உணவுக் களஞ்சிய

## அரிசி மூடைக் கொள்ளை 5444 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் உணவுக்களஞ்சியத்தில் சுமார் 17 லட்சம் ரூபா பெறுமதியான 5444 மூடை அரிசி கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

முதல் தடவை 404 மூடைகளும், மறுதடவை 5040 மூடைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

இவற்றுடன் 8000 கிலோ கிராம் பாவிக்கமுடியாத

(8ம் பக்கம் பார்க்க)

## விளையாட்டரங்கில் ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் தபாலகங்கள் மூலம் ஒய்வூதியம் பெற்றவர்களுக்கு நேற்று ஒய்வூதியம் வழங்கப்பட்டது.

அதிகாலை 7 மணிக்கே சிலர் அங்கு வந்து கியூவில் நின்ற

(8ம் பக்கம் பார்க்க)

கொள்ளைகளைக் கண்டித்து

## சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று உண்ணாவிரதம்!

[ஊரெழு]

காங்கேசன்துறை] சீமெந்து தொழிற்சாலையில் பல தடவைகள் அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக இன்று வெள்ளிக்கிழமை தொழிற்சாலை ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடாத்தவிருக்கின்றனர். காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாவிரதம் மாலை 3 மணிக்கு நிறைவு பெறும்.

சீமெந்து தொழிற்சாலை பொது தொழிலாளர் யூனியன் வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரமொன்றில் இது தொடர்பான விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

''எமது தொழிற்சாலையில்

[8ம் பக்கம் பார்க்க]

## இவர்களுக்கு 15—19ம் திகதிவரை ஒய்வூதியம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். கச்சேரியிலுள்ள வங்கியில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள வங்கியில் 15-ந் திகதி முதல் 19-ந் திகதி வரை ஜூன்

(8ம் பக்கம் பார்க்க)

மாணவர்களுக்கு

**விசேட அறிவித்தல்**

பனம்பொருள் அபிவிருத்திச் சபையும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும்
இணைந்து நடாத்தும்
பனைவள உற்பத்திக் கண்காட்சி
15-ந் திகதி சனிக்கிழமை
வரை நடைபெறும்.
சகல பாடசாலை மாணவ, மாணவிகளும்
சனிக்கிழமை
இக்கண்காட்சியைப் பார்வையிட்டுப்
பயனடையுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**பனம் பொருள் அபிவிருத்திச்சபை**

[3795]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் கிணறு, மதில் ஆகிய வசதிகளுடன் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சாயி றைகிளீனேர்ஸ், (வெலிங்டன் சந்தி), 52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [3763]

## தேவை

மாநகர எல்லைக்குள் வசிப்பவரும் 20 வயதுக்கு மேற்படாத ஆண்கள். 20-6-85க்கு முன் விண்ணப்பிக்கவும். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். [3767]

## வைத்தியம்

நோய்பிணி துன்பம் நீங்கி இனிது வாழவும், பேய்பிசாசு கோளாறுகளிலிருந்து விலகிக் கொள்ளவும். வியாபார ஸ்தலங்கள் வீடுகள் முதலியன காவல் பண்ணவும், கடற்தொழில் விருத்தி. வியாபார விருத்தி முதலியவற்றிற்கு இயந்திரத் தகடுகளும், துவாக்களும் செய்துகொடுக்கப்படும். குறிப்பு: (வெளிநாடுகளில் பிரபலமிக்கவர்) இறைவனின் சக்தியினால் மலையாள முறையில் உடன் செய்து கொடுக்கப்படும். முகவரி:- ஷாஹிஷிபா ஆத்ம ஆரோக்கிய நிலையம், இல: 125, பீச் ரோட். யாழ்ப்பாணம் 3777

## நன்றி நவிலல்

31-05-1985ந் திகதி நடைபெற்ற எங்களது மகன் திருவளர் செல்வன் வி மயூரரதனது உபநயன பிரம்மோபதேச வைபவத்தில் கலந்து கொண்டவர்கட்கும், ஆசிச் செய்திகள் அனுப்பியவர்கட்கும், மற்றும் இவ்விழா சிறப்பாக நிறைவேறிட பலவகையாலும் தங்கள் உதவிகளை வழங்கிய எல்லோர்க்கும் எமது இதயம் நிறைந்த நன்றி.

வி. விவேகானந்தசர்மா,
வி சரஸ்வதி (சரோஜா).

''மயூரகம்'', குருக்கள் கிணற்றடி,
அளவெட்டி. 3764

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி
## R. A. சமரக்கோன்

அன்னையின் மடியில்: 28–01–1906
ஆண்டவன் காலடியில்: 14–06–1980



கண்ணாய் நாமிருக்க
கண்மணியாய் நீ இருந்தாய்
நிலவாய் நாமிருக்க
நிழலாய் நீ இருந்தாய்
சுரமாய் நாமிருக்க
சாஹித்தியமாய்
நீ இருந்தாய்
பூவாய் நாமிருக்க
பூபாளம் ஆனாயோ
நிர்மலமாய் நாமிருக்க
நிபாதம் ஆனாயோ
நீங்காத உன் நினைவுகள்
-நமக்கு
தெவிட்டாது
தெவிட்டாது.

உன் நினைவில் மூழ்கி நிற்கும்:
மனைவி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
'லொறற்றோ', இளவாலை.

3740

## 31–ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



செல்வி பசுபதி
நிர்மலாதேவி

அன்னை மடியில்:
01–10–1966

ஆண்டவன் அடியில்:
15–05–1985

எங்கள் அன்புத் தெய்வமே! சிறு வயதிலிருந்தே புனிதப் பணிசெய்த நீ புனிதப் பணியொன்றிற்காகப் புறப்பட்டுச் சமுத்திரத்தில் உயிர் நீத்துவிட்டாய். உனது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

எங்கள் செல்வத்தின் இறுதியாத்திரையிற் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகள் கொடுத்தவர்கட்கும், பலவித உதவிகளைச் செய்தவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்

பெற்றோர், சகோதரர், உறவினர்கள்.

கந்தசுவாமி கோவிலடி கிழக்கு,
நெடுந்தீவு. 3755

## தவறிவிட்டது

523222937X இலக்க தேசிய அடையாள அட்டையும். அலுவலக அடையாள அட்டையும் யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் T.S. மூர்த்தி-95, தொட்டிலடி, சங்கானை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 3770

சுப்பிரமணியம் தங்கரத்தினம், No: 1234, ஆனந்தா மாவத்தை, உணுப்பிட்டிய, வத்தளை என்பவருடைய அடையாள அட்டை, சில போட்டோக்கள் மாணவியினுடையது. சிவப்பு நிறப் பேஸ்சுடன் யாழ். அரசினர் வைத்தியசாலை எச்சிமா கிளினிக்கில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் A நாகலிங்கம், ஊரெழு கிழக்கு. சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். 3768

இல: 56334162V ஐயாத்துரை வாமதேவன், பிரதான வீதி, சங்கானை என்பவருடைய அடையாள அட்டை 9-6-85-ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3774

சிதம்பரப்பிள்ளை ஸ்ரீரங்கராசா, 7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு என்பவருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணம் குருநகர் பீச்ரோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்: V மரியதாஸ், 344/6 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3775

## குத்தகைக்கு

யாழ். K. K. S. வீதியில் C. S. K. கட்டிடத்தில் 15-ம், இலக்கக் கடை குத்தகைக்கு உண்டு. தொடர்பு:- M T. சோமசுந்தரம், 199, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம் 3771

## விற்பனைக்கு


இந்தியன் பழைய ஓடுகள் 2000 விற்பனைக்குண்டு. தொடர்பு:- க. சிவா, இல: 9, மாட்டின் லேன், யாழ்ப்பாணம். 3781

மாவடிச்சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் வீடுகட்டுவதற்கு ஏற்ற 3½ பரப்புக் காணியை அரைவாசியாக (1¾) பரப்பாக வாங்கக்கூடியவர்களுக்கு விற்கப்படும். திருமதி இராமநாதன் மகேஸ்வரி, அபரர் வே நாகலிங்கம் J.P.U.M., அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோவில் வீதி, வட்டுக்கோட்டை. 3769

சாவகச்சேரி தனங்கிளப்பில் கேரதீவு ரோட்டை முகப்பாகக் கொண்ட 30 பரப்பு காணியும், சாவகச்சேரி கச்சாய் ரோட்டில் முதலாம் கட்டையடியில் வீடு கட்டுவதற்குகந்த காணித் துண்டுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- திரு. சி. பொ. மயில்வாகனன். சட்டத்தரணி, சாவகச்சேரி. 3773

## 31-ம் நாள் நினைவுதினம்

மத்தியாஸ்
யேசுநாயகம்



ஆண்டவன் படைப்பு
03–02–1961

ஆள்பவன் அழிப்பு
15–05–1985

நெடுந்தீவிலிருந்து நீர்நெடும்பயணம் வருகையிலே நெஞ்சிலே ஈரமில்லா காடையர் கைபட்டு உம்முயிரை மாய்த்தீரோ எம்மையெல்லாம் நினைத்தீரோ....


உம் பிரிவு கண்டு நெஞ்சுருகி நிற்கும்;
தந்தை, தாய், மனைவி, சகோதரர்கள்,
மாமன், மைத்துனர், மைத்துனிமார்,
பெருமக்கள், மருமக்கள்.

6-ம் வட்டாரம், மயிலிட்டி.

3752

## 55வது நாள் நினைவஞ்சலி
## வேலுப்பிள்ளை இராசகோபால்

(ராசு தம்பி)



பெற்றவர் படைப்பு:
12-06-1962

ஆள்பவர் பறிப்பு:
15-04-1985

சொந்த மக்களின் கண்ணீர்க் கடல் கண்டு
அலைகடல் மீது உன் இன்னுயிரை பணயம்
வைத்தனையோ?

உன்பிரிவால் துயருறும்:
தந்தை: வேலுப்பிள்ளை, தாய்: இலட்சுமி,
சகோதரர்கள்:
பாலசிங்கம் (மேற்கு ஜெர்மனி),
சந்தனம் (காங்கேசன் சீமேந்து தொழிற்சாலை),
தருமரத்தினம் (லண்டன்),
இரத்தினசிங்கம் (இங்கோ).
சுஜநிதா (பெருமகள்), ரஜீவன் (பெருமகன்)
மற்றும் உற்றார், உறவினர்கள்.

3772

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
மங்கையர்க்கரசி கனகரெத்தினம்
(விஞ்ஞான ஆசிரியை)



மறைவு:
27-05-1984

திதி:
14-06-1985

அன்பின் உருவே! பண்பின் பிறப்பிடமே!
கல்விக்கடலே! குடும்பத்திற்கு விளக்கேற்றிய
பெண் தெய்வமே! காளி காளி என்று
காளி அம்மாளுடன் கலந்து விட்டாயே!
தாயே!! நெஞ்சுள்ளவரை நினைவு இருக்கும் அம்மா!
உமது ஆத்மா சாந்திபெற என்றும்
இறைவனை மன்றாடி நிற்கின்றேன்.
சாந்தி பெறுவீர்களாக!!!

அன்பின் கணவன்

A-2/F4 புளூமெண்டல் தொடர்மாடி,
கொழும்பு-13. 3778

# "பாகிஸ்தானின் அணுஆயுதத் திட்டத்தை அமெரிக்கா தடைசெய்ய வேண்டும்"

## றீகனிடம் ரஜீவ் வலியுறுத்து

வாஷிங்டன், ஜூன் 13

**பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உற்பத்திசெய்யாமல் தடுப்பதற்கு அமெரிக்காவினால் முடியும். அத்தகைய நிர்ப்பந்தம் ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி பாகிஸ்தான் மீது மேற்கொள்ள முடியும். அவர் அதனை மேற்கொண்டே ஆகவேண்டும்" என்று இந்திய பிரதமர் திரு. ரஜீவ்காந்தி அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகனிடம் வற்புறுத்தியுள்ளார்.**

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு தற்போது அங்கு தங்கியிருக்கும் இந்திய பிரதமர் அமெரிக்க ஜனாதிபதி வெள்ளை மாளிகையில் நேற்று சந்தித்து உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தை நடத்தினார். சுமார் அரைமணிநேரம் தனியாகவும் பின்னர் அமைச்சர்கள், அதிகாரிகளின் உதவியுடன் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

வெள்ளைமாளிகைக்குசென்ற இந்திய பிரதமருக்கு வெள்ளை மாளிகைப் புல் வெளியில் பெரும் வரவேற்பு அமெரிக்க ஜனாதிபதியால் அளிக்கப்பட்டது.

பாகிஸ்தான்தேவைக்குமேல் ஆயுதங்களை கொள்வனவு செய்வதினால் இந்தியாவும் பெருமளவில் ஆயுதங்களை உற்பத்திசெய்யவேண்டியுள்ளது. இதனால் அபிவிருத்திக்கு செலவுசெய்யவேண்டிய பெறுமதிமிக்க வளங்கள் வீணாக்கப்படுகின்றன. இதனைவிட பாகிஸ்தானின் அணுஆயுதத் திட்டமும் இந்தியாவுக்கு பல்வேறு பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளது என்றும் இந்தியப் பிரதமர் கவலைதெரிவித்தார். இந்தியாவும் அமெரிக்காவும் பல்வேறு துறைகளில் ஒத்துழைக்கமுடியும் என்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இவற்றுக்கு பதிலளித்துப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்தினால் அமெரிக்காவும் கவலைகொண்டுள்ளது. ஆயினும் தெற்காசியாவில் அணு ஆயுதப்பரம்பல் ஏற்படுவதனை நிறுத்துவதற்கு இந்தியாவுடன் அமெரிக்கா ஒதத்துழைக்கும் என்றார்.

அப்கானிஸ்தான் பிரச்னை மேற்காசிய நிலைபரம், அணு ஆயுதபடைக்குறைப்பு ஆகிய விடயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேசினார்கள்.

சர்வதேச அணுசக்தித் திட்டத் தீர்மானம் பாரபட்சமாக இருப்பதினால் இந்தியா சர்வதேச அணுசக்தித் திட்டத்தில் கைவெழுத்திட மறுத்துள்ளது இநத பாரபட்சம் அகற்றப்படும்பட்சத்தில் இந்தியா இத் திட்டத்தில்சேர்ந்து கொள்வதுபற்றி பரிசீலிக்கும் என்று இந்தியப் பிரதமர் அமெரிக்க வெளியுறவு அமைச்சரிடம் விளக்கினார்.

அமெரிக்க—இந்தியத் தலைவர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இரு நாட்டு உறவிலும் புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக உயர்தொழில் நுட்பத்தைஅமெரிக்காவிடமிருந்து இந்தியா பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜோர்டான் விமானம் பெய்ரூட்டில் தகர்க்கப்பட்டது

### கடத்தல்காரர்கள் தப்பிவிட்டனர்

பெய்ரூட், ஜூன், 13

ஜோர்டான் விமானமொன்றைக் கடத்தியோர் பெய்ரூட்டில் அந்த விமானத்திலிருந்த சுமார் 140 பிரயாணிகளை இறக்கிவிட்டு விமானத்தைக் குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர்.

இந்த விமானத்தை மூன்று தினங்களுக்கு முன்னர் பெய்ரூட்டிலிருந்து லெபனான் ஷிட்டி முஸ்லிம் நால்வர்கடத்திச் சென்றனர். லெபனானில் இருக்கும் பாலஸ்தீன அகதிகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அரபு நாடுகள் முயற்சி மேற்கொள்ளவேண்டுமென்றும் அரபு லீக்கின் செயலாளர் நாயகம் 24 மணி நேரத்துக்குள் தம்முடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்றும் கடத்தல்காரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் பிரயாணிகள் கொல்லப்படுவார்கள் என்றும், விமானம் தகர்க்கப்படுமென்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

விமானத்தை சைபிரஸ் மற்றும் பல இடங்களுக்குக் கொண்டுசென்ற கடத்தல்காரர்கள் மறுபடியும் அதனை பெய்ரூட்டிற்கே திருப்பிக் கொண்டுவந்தனர். பயணிகளைப் பத்திரமாக இறக்கிவிட்டு, விமானத்தைத் தகர்த்துவிட்டு அவர்கள் ஜீப் ஒன்றில் தப்பிச் சென்றுவிட்டனராம்.

இவ்விமானத்தில் இனந் தெரியாத இலங்கையர் ஒருவரும் இருந்ததாகக் கூறப்படுகிறது

இதேவேளை சைப்பிரஸில் இன்னொரு விமானமும் கைக்குண்டு வைத்திருந்த ஒரு பாலஸ்தீனியரினால் கடத்தப்பட்டது ஆயினும் அவர்பின்னர் சைப்பிரஸ் அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளார்.

## பங்களாதேஷில் ஐவர் பலி

(டாக்கா)

பங்களாதேஷின் சிட்டாகொங் நகரில் குளோரைட் நிரம்பிய சிலிண்டர் ஒன்று வெடித்ததில் 5 பேர் பலியாகியுள்ளனர் 30 பேர் படுகாயமடைந்தனர். 100 பேருக்கு சிறுகாயமேற்பட்டுள்ளது.

## மலையகம் செல்ல விருப்பம்

[வவனியா]

அநுராதபுரம் கலவரத்தின் பின் அகதிகளாக உயிருக்கு அஞ்சி வவனியா வந்து அகதி முகாமில் உள்ள சிலர் மலையக பகுதிக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

போக்குவரத்து சீரானதும் இவர்கள் அங்குசெல்லத் திட்டமிட்டுள்ளார்கள்.

## பிறப்பு அத்தாட்சி வழங்குவதில் தடங்கல்!

[யாழ்ப்பாணம்]

யாழ். அரச செயலகத்தில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள்வழங்குவதற்கு உபயோகிக்கப்படும் பத்திரங்களுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்குவது கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அத்தியாவசியமாகத் தேவைப்படுவோர் தகுந்த அத்தாட்சிகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாத்திரம் ஒரு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மட்டும் வழங்குவதற்குப் பதிவாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து பிரதிப் பத்திரங்கள்யாழ். அரசசெயலகத்திற்குவந்து சேராததினாலேயேபிறப்புஅத்தாட்சிப்பத்திரம் வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாம்.

பாதுகாப்பு, போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களால் பிரதிகள் கொழும்பிலிருந்துயாழ். அரசசெயலகத்துக்குகொண்டுவரமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## சிங்கப்பூர் பல தமிழர்களை வெளியேற்றி விட்டதாம்

[கொழும்பு]

சிங்கப்பூரில் வசித்துவந்த இலங்கையைச் சேர்ந்த கல்விமான்கள் உட்பட பல தமிழ் நிபுணர்களை நாட்டைவிட்டு வெளியேறும்படி சிங்கப்பூர் அரசாங்கம் பணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் குடியிருக்கும் இவர்கள் இலங்கை அரசுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று காரணம் காட்டியே இவர்களுக்கு இந்த உத்தரவு பிறப்பிககப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வெளியேற்றப்பட்டவர்களில் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் அடங்குவர் என்றும் இவர்களில் பெரும் பாலானோர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது, (ரா)

## அனுமதியின்றி மின்சாரம் பாவிப்போருக்கு எச்சரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் எடுப்பவர்களுக்கு பொதுநலனை முன்னிட்டு அங்கீகாரமற்ற முறையில் மின்சார விநியோகத்தைப் பெற வேண்டாம் என்றும் இதனால் ஏற்படும் கஷ்டங்கள் குறித்தும் தனித்தனியான கடிதங்கள் யாழ் அபிவிருத்திசபையின் பண்டத்தரிப்பு உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ளார். இந்த அறிவித்தல் கிடைத்தபின்பும் அனுமதியற்ற மின்இணைப்பு அகற்றப் படாவிட்டால் இதுபற்றிய விபரங்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் என்றும் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மின்பாவனை காரணமாக 'மெயின் சுவிச்' போன்ற மின்சாதனங்கள் எரிந்து சேதமடைந்ததால் ஏழு நாட்களாக பண்டத்தரிப்பில் மின்சார விநியோகம் அறவே இல்லாதிருந்ததும், மின்சாரப்பகுதி ஊழியர்களின் முயற்சியினால் பலத்த பிரயத்தனத்தின் பின்புநேற்று முன்தினம் மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## 'கல்வி தடையின்றி தொடர வேண்டும்'

### அதிபர் வேண்டுகோள்

(மானிப்பாய்)

"தமிழ்மக்களின் பெருமைக்கு உதவியாக இருந்துவரும் கல்வியைத் தடையின்றித் தொடர்ந்து வருங்கால சந்ததியினர் பெற்றுக் கொள்வதற்கு எல்லோரும் ஏற்ற முயற்சிகளை எடுக்க வேண்டும்' என்று ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திரு. ந. சிவபாதம் மேற்படி பாடசாலை அபிவிருத்திசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைவகித்துப்பேசுகையில் கூறினார்.

திரு சிவபாதம் மேலும் பேசுகையில், எவ்வித இடர் நேரிடினும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உரிய கல்வி வழங்குவதில் தயக்கம்காட்டக் கூடாது என்றும் பெற்றோரின் ஊக்கமே மாணவரின் கல்விக்கு உற்சாகமளிப்பதாக இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

பாடசாலைகளின் குறைகளை நிவர்த்தி செய்வதில் அபிவிருத்திச்சபை முன்னின்று உழைத்தால் பாடசாலை நிச்சயமாக வளர்ச்சியடையும் என்றும் அவர் கூறினார்.

அபிவிருத்திச்சங்க உறுப்பினர் திரு நா. பொன்னம்பலம் பேசுகையில், கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டி உதவுவது ஒரு சமுதாயத்துக்குச் செய்யும் சிறந்தசேவை எனக் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு கா. நித்தியானந்தன் மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்கு அபிவிருத்திச்சங்கம் ஆற்றவேண்டிய பணிபற்றியும் பெற்றோரின் அக்கறை மாணவரின் கல்வி அபிவிருத்தியில் பெரிய பங்கு வகிக்கின்றது என்றும் எடுத்துக் கூறினார்.

நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்- திரு ந சிவபாதம், உபதலைவர்- திரு நா. பொன்னம்பலம், செயலாளர்- திரு. எஸ். நவரத்தினம், உபசெயலாளர்- திரு க. சுப்பிரமணியம், பொருளாளர்- திரு. க. நித்தியானந்தம். ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## "ஆலய நிர்வாகிகளுக்கு ஆணவம் கூடாது"

(வட்டுக்கோட்டை)

"ஆலயங்களை நிர்வகித்தல் நல்லதோர் பணியென்பதால் முகாமையாளர்கள் சமூகத்தில் நல்லதோர் மதிப்புடன் வாழுகின்றனர். இவர்கள் நாளாவட்டத்தில் தமக்கிருக்கின்ற செல்வாக்கால் ஆணவ ஆட்சி நடத்தத் தலைப்படுகின்றார்கள். இத்தகையதோர் முகாமைத்துவம் அவர்களை ஆலய நிர்வாகிக்குரிய தகுதியிலிருந்து கீழே தள்ளிவிடுகின்றது"

இவ்வாறு வட்டுக்கோட்டை சங்கரத்தை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக விழாவில் 'அருள்மொழியரசி' வித்துவான் வசந்தா வைத்தியநாதன் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில், சைவஆலயங்களில் ஸ்தபதிகள், ஓவியர்கள் தங்கள் திறமைகளினால் புராதன தத்துவங்களைக் கலை வடிவு கொடுத்து வெளிக் கொணருகின்றனர். தற்பொழுது தமிழகத்தில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் சிற்ப சாஸ்திரக் கலை வளர்ச்சி பெற்றுள்ளமை போற்றத்தக்கதாகும் என்றார்.

பிரம்மஸ்ரீ பரமேசுவரக் குருக்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவின் இறுதி நிகழ்ச்சியாக பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. ஜீ. சிதம்பரநாதன் நன்றி கூறினார்.

**மணிவாக்கு**

வாழாமல் இருப்பது சிறப்பு;
பெரியோனுய் வாழாவிடத்து!

—டென்னிசன்.

# நமது நோக்கு

## 'மலையகப் புலி'களும் தொண்டாவின் புகாரும்

தலவாக்கொல்லை ஹொலிரூட் தோட்டத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தையடுத்து அப்பாவிகளான இரு இளம் தமிழ்த் தொழிலாளர்கள் 'புலி'கள் எனப் பட்டஞ்சூட்டி அழைத்துச் செல்லப்பட்டு மிலேச்சத்தனமாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார்கள். இதுபற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தமது தொழிற் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எம்.எஸ். செல்லச்சாமியுடன் சென்று ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் புகார் செய்துள்ளார். இதேபோன்று பல சம்பவங்கள் மலையகத்தில் அவ்வப்போது நடைபெறுவதாகவும், விசாரணை என்ற போர்வையில் தமிழ்த் தொழிலாளர்கள் சட்டத்தின் பாதுகாவலர்களால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்றும் எடுத்துக் கூறியுள்ள திரு தொண்டமான், இவ்வாறு அமைதியைக் குலைக்க முனையும் சக்திகளுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் வற்புறுத்தியிருக்கிறார்

சிங்கள மக்கள் மத்தியில் எதுவித பாதுகாப்பும் இன்றித் தம் தொழிலை மாத்திரமே நம்பி வாழும் இம்மக்கள் கடந்த காலங்களில் அடிக்கடி இனக் கலவரங்களால் துன்பங்களுக்குள்ளாகி வந்துள்ளனர்

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பாரம்பரிய பிரதேசங்களில் ஏதாவிலும் அரச எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெறுமாளுல் உடனடியாகவே தென்னிலங்கையில் அதுவும் மலையக அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக வன்செயலகள் தலை தூக்குவது வழமையாக இருந்துவந்துள்ளது. கடந்த 1981ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தையடுத்து இரத்தினபுரியில் பாதிப்புக்குள்ளான மலையகத் தோட்டமொன்றுக்குச் சென்ற ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன அவர்கள், பலத்த பொருளாதார இழப்புக்குள்ளான ஒரு தொழிலாளியைப் பார்த்து, 'ஈழம் வேணுமா?' என்று கேட்க, 'அதுபற்றி ஒன்னும் தெரியாது' என்று அத்தொழிலாளி பதில் சொன்னராம். தான் வளர்த்த கோழிகளையெல்லாம்கூட இனவெறியர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள் எனக் கூறிய அத்தொழிலாளிக்கு, 'கோழி தாறது, முட்டை தாறது' என்று ஆறுதல்கூறிவிட்டு ஜனதிபதி கொழும்பு திரும்பினர். ஆனல் 1983 கலவரத்தில் அதைவிட மோசமான நிலைமையை அவர்கள் எதிர்நோக்கலானர்கள். அதே சமயம் வடக்குக் கிழக்கில் ஏற்படும் சம்பவங்களின் எதிர் விளைவுகளை அப்பகுதிக்கு அப்பால் விரிவடையாமல் ஆயுதப் படைகளைக்கொண்டு கட்டுப்படுத்திவிட்டதனல் தென் பகுதியில் தமிழர்கள் அமைதியுடன் வாழ்கிறர்கள் என்ற ஒரு மயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனல் தனிப்பட்ட சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெறத்தான் செய்கின்றன என்பதுவும், அவைகளை அரசு கட்டுப்படுத்தி அப்பாவித் தமிழர்களை அமைதியாக வாழ உதவ வேண்டும் என்பதுமே திரு. தொண்டமானின் நிலையாகும்.

அரசின் செயல்களையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டுவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் அதற்கு மாருகப் பேசுபவர்கள் - அதுவும் தமிழர்களாயின் அவர்களுக்குப் 'புலிகள்' என்ற பட்டம் சூட்டுவதும் தென்னிலங்கையில் ஒரு பாஷனக உருவாகி வருகின்றது

அரசாங்கம் கடவுளால் உருவாக்கப்பட்டது தல்ல; ஆட்சியிலிருப்பவர்கள் தேவதூதர்களுமல்லர். அவர்கள் சொல்வதும் செய்வதும் எல்லாமே நீதிக்குட்பட்டவைதான் என்று கொள்ள முடியாது. எனவே அவை விமாசனத்துக்குரியவை. விமர்சனம் செய்பவர்கள் எல்லாரையுமே 'புலிகள்' என்று முத்திரை குத்துவது சரியல்ல.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை விடுவித்து தனிநாடு அமைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு இயக்கம் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என தன்னை அழைத்துக் கொள்கின்றது. இதேநோக்கம் கொண்ட வேறுபல இயக்கங்களும் இருக்கின்றன இவைகளுக்கிடையில் போராட்ட முறைகள், செயறபாடுகள் என்பவற்றில் வித்தியாசமுண்டு. எனினும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் தமிழர்—தமிழ்ப் பகுதிகள் தொடர்பான எந்த விடயத்திலும் புலிகளைச் சம்பந்தப்படுத்துவது அவர்களின் விளக்கமின்மையையே காட்டுகின்றது இவர்கள் பரப்பும் செய்திகளால் சாதாரண சிங்கள மக்களும் அவ்வாறே கருதுகிறர்கள்.

உதாரணமாக அண்மையில் குருநகர் அரிசிக்களஞ்சியத்தில் நடந்த கொள்ளையை தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் கண்டித்தும், தமக்குத் தொடர்பு இல்லையென்று அறிவித்துமுள்ள வேளையில் ''அரிசிக்களஞ்சியத்துக்குள் புலிகளின் பாய்ச்சல்'' என மகுடமிட்டு கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

இதுமட்டுமல்ல 'ஈழம்' என்பதற்கும் 'தமிழ்ஈழம்' என்பதற்கும்கூட தென்னிலங்கையில் தவருன கருத்து இருந்து வருகின்றது

தனிநாடு கோருபவர்கள் ''ஈழம்'' கோரவில்லையென்பதையும், ''தமிழ்ஈழம்'' ஒன்றையே அவர்கள் உருவாக்க விரும்புகிறர்கள் என்பதையும் புரியாமல்

---

பண்டா—செல்வா, டட்லி—செல்வா ஒப்பந்தங்களின்பின்

# டில்லிப் பேச்சு விபரம் வெளிவரத்தான்வேண்டுமா?

புதுடில்லி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் இச்சமயத்தில் மக்கள் பொறுமையாக இருக்கவேண்டுமென்றும் ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன ஆளும்கட்சிப் பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறர்.

டில்லிப் பேச்சின் விபரங்களை இப்பொழுது வெளியிடுவது சரியல்ல என்று கூறிய ஜனதிபதி இதுவரை இரகசியத்தைக் காப்பாற்றிவருகிறர்.

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தியும் தாம் இலங்கை ஜனதிபதியுடன் நடத்திய பேச்சுவர்த்தைகளில் ஏற்பட்ட உடன்பாடு பற்றியோ அப்பேச்சுவார்த்தைகள் பற்றியோ எதையும் வெளியிடமறுத்து வருகிறர். இலங்கையின் இனப்பிரச்னைக்கு நல்லதொரு தீர்வு விரைவில் கிட்டும் என்று ரஜீவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பண்டா—செல்வா ஒப்பந்தத்துக்கு அரசியல் ஆதிக்கத்தையே நோக்காகக் கொண்ட அரசியல்வாதிகள் எதிர்ப்புத்தெரிவித்து நாட்டு மக்களையும் தூண்டிவிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தி இறுதியில் அது கிளித்தெறியப்பட்டது. பிரச்னைக்குத் தீர்வு கிடைப்பதற்குப் பதில் அது மோசமடைந்தது!

### டட்லி-செல்வா ஒப்பந்தம்

பின்னர் எட்டுவருடங்களின் பின் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு நேர்ந்த கதியைக் கருத்தில்கொண்டு டட்லி-செல்வா பேச்சுவார்த்தையும் உடன்படிக்கையும் மிக அந்தரங்கமாக இருந்தது.

எஸ். எம். ஜி.

ஆனாலும் அரசியல் ஆதிக்கப் போட்டி அதையும் விட்டுவைக்காமல் அம்பலப்படுத்தியது. முடிவில் அந்த உடன்படிக்கையும் கைவிடப்பட்டது.

இப்பொழுது டில்லிப் பேச்சுவார்த்தை விபரங்களை பகிரங்கமாக வெளியிடவேண்டுமென்று சுதந்திரக்கட்சியின் தலைவியும் முன்னுள் பிரதமருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா வற்புறுத்திவருகிறர்.

காட்டில் வேட்டைக்குச் சென்ற ஒருவனைக் காட்டு மிருகம் துரத்திவர அவன் உயிரைப் பாதுகாப்பதற்காக ஓடும்பொழுது ஒரு பாண்கிணற்றினுள் விழப்போக அந்தக் கிணற்றுக் கட்டுகளில் தொங்கிய செடியைப் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் தொங்குகையில் கீழ்ப் படியில் ஒரு பாமபு தலையைத் தூக்கி அவனைத் தீண்டுவதற்குத் தயாராக இருக்க செடி பட்டுக் கிணற்றுக் கட்டுக்குள்ளிருந்த தேன்கூடு கலைந்து அவனைத் தேன் குழவிகள் கொட்ட இத்தனை துயரம் மிகுந்த தொல்லைகளை அனுபவித்துக்கொண்டு அந்தரத்தில் தொங்கிய அவன் தேன்கூட்டில் இருந்து ஒழுகிய தேனை நாக்கை நீட்டி ருசித்து, ஆறுதல்பெற்றுனும்!

சென்ற பொதுத் தேர்தலில் ஆட்சிபீடத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட திருமதி சிறிமா பண்டாரநாயகாவை

பெரிய அரசியல்வாதிகளும் கூட குழம்பிப் போயிருக்கிறர்கள்.

''குதிரை குப்புறத் தள்ளியதுமல்லாமல் குழியும் தோண்டிய கதையாக ஜனதிபதி விசேஷ ஆணைக்குழு விசாரணை செய்து அதன் விளைவாக குடியுரிமையும் இழந்தார்.

இந் நிலையில் இன்றைய நெருக்கடியைப் பயன்படுத்தி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு சிறிமா அம்மையாருக்கு ஆசை வந்துள்ளதில் வியப்பில்லை!

ஆட்சி அதிகாரத்தை இழந்து, குடியுரிமை பறிக்கப்பட்டு கட்சி பிளவுபட்டு, மகளும் மருமகனும் தமக்கெதிராகவே ஒரு கட்சியை உருவாக்கி இடைத்தேர்தலிலும் தம்மை எதிர்த்துப் பிரசாரம் செய்ய அரசியலில் பல தொல்லைகளையெல்லாம் அனுபவித்துவரும் இவ்வேளையில் டில்லிப் பேச்சின் இரகசியங்கள் வெளியாளுல் அதைவைத்தாவது அரசியலில் மீண்டும் உயிர்பெற்றுவிடலாமென்று ''கிணற்றுக்குள்ளிருந்து தேன் குடித்தவன்'' போல் சிறிமா அம்மையாருக்கும் நப்பாசை!

ஆட்சிப்பீடத்திலிருந்த போது பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் இனப்பிரச்னைக்கு நல்ல தீர்வுகாண நினைக்காத சிறிமா அம்மையார் தமிழ் மக்களுக்குப் பிரச்னைக் இருப்பதாகவே எண்ணியதில்லை!

என்ருலும் ஜனதிபதி தேர்தலில் சிறிமா அம்மையார் தமது கட்சியின் சார்பில் வேட்பாளராக நிறுத்திய கொப்பேகடுவைக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் எழுபத்தேழாயிரம் வாக்குகள் கிடைத்தன. (அவை அரசுக்கு விரோதமான வாக்குகள்தானென்ருலும்!) ஆனலும் சமீபத்தில் யாழ்ப்பாண மக்கள் பயங்கரமாகப் படுகொலை செய்யப்பட்டும், சித்திரவதைக்குள்ளாகியும் ஏன் என்று கேட்காத சிறிமா அம்மையார், மட்டக்களப்பில் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கிழக்கில் முஸ்லிம்க்களையும், சிங்கள மக்களையும்பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குரல் எழுப்பினர்!

இன்றுள்ள நிலையில் டில்லிப் பேச்சின் விபரங்களை வெளியிடாமல் ரஜீவ் கூறியது போல் ஜனதிபதி ஜே. ஆர். தமது வாக்குறுதியைச் செயலுருவில் காப்பாற்றுவதே நல்லதும் தேவையுமாகும்!

---

# பனைவளம் பெருக ஐந்தாண்டு திட்டம்

(நேற்றைய தொடர்ச்சி)

பனம் சாறு பனம் பழக் காலங்களிலேயே பனம் பழச சாற்றைப் பெற முடியும் என்ற நிலை மாற்றப்பட்டு வருடம் முழுவதும் பனம் பழச் சாற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக பனம்பழச்சாறு போத்தலில் அடைக்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டுள்ளது இதன் மூலம் வருடம் முழுவதும் எமக்குப்பனம் பழம் கிடைப்பதுடன் நாம் விரும்பிய நேரத்தில் பனங்காய்ப் பணிகாரம் செய்து உண்டு மகிழக் கூடியதாக உள்ளது. பனம் பானம், பனம் கோடியல், சோஷ், கிரஷ் போன்ற பனம் பழ உற்பத்திகளே எமது பரீட்சார்த்த உற்பத்தியாகவும் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுவருகின்றன. மென் மேலும் பனம் பொருட்களைக் கூடுமான அளவில் உற்பத்தி செய்து சந்தைப் படுத்தக் கூட்டுறவுச் அமைப்புக்களும் தொண்டர் ஸ்தாபனங்களும் முன்வர வேண்டும் இதற்கான சகல உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கச் சபை தயாராக உள்ளது

பதநீரிலிருந்தும் பெறப்படும் உற்பத்திகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன பதநீரிலிருந்து பனம பாணி நவீன முறையில் தயாரிக்கப்பட்டுப் போத்தலில் அடைக்கப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது பனை ஓலையிலான உற்பத்திப் பொருட்களும் இப்போது நவீனமயப்படுத்தப்பட்டு போதுமான அளவு மக்களுக்குச் கிடைக்கின்றன சபை உருவாகிகிய பின்பு 100 ச்கும் அதிகமான புதிய பாவனைப் பொருட்கள், ஆடம்பர,சைப் பணிப் பொருட்கள் பனையோலையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளின் மூலம் பிளாஸ்ரிக், பிரப்பு, பன்புல் போன்றவற்றிற்குப் போட்டியாகப் பனையோலையைப் பயன்படுத்தலாமென்று திட்டமிடப்பட்டுள்ளது. பனந்தும்பு பெருமளவில வெளிநாடுகளுக்கு ஏற்றுபதி செய்யக்கூடிய வாய்ப்பேற்பட்டுள்ளதால் பல்வேறுமட்டத்திலும் பனந்தும்பு உற்பத்தி துரிதப்படுத்தப்பட்டுள்ளது

பல்வேறு தேவைகளுக்காகவும் வருடா வருடம் ஒரு லட்சம் பனை மரங்கள் வெட்டப்படுகின்றன இந்த நிலை நீடிக்குமாளுல் 10 மில்லியன் பனை மரங்களும் மிகவிரைவில் அழிந்து போய்விடும். எனவே இதனை ஈடுசெய்யும் வகையில் வருடந்தோறும் 5 லட்சம் பனம் விதைகளாவது நாட்டிவர வேண்டும். பனம் பண்ணைகளை உருவாககுவதில் அபிவிருத்திப்பிரிவு ஈடுபட்டு வருகின்றது. எதிர்காலத்தில் பனம் விதைநடும் முறையோடு பனங்கன்றுகளை நடுகைக்காக விநியோகம் செய்யச் சபை திட்டமிட்டுள்ளது. பொலித்தீன் உறைகளில் பனம் விதை நாற்றுக்கள் அமைக்கப்பட்டு இப்பனம் நாற்றுக்கள் நடுகை செய்யப்படும். இதனுல் சிறந்த பனங்கன்றை நாம் நாற்றுமேடை மூலம் தெரிவு செய்து கொள்ள முடியும் பனையை எவ்வாறு பொருளாதார மேம்பட்டிற்கான பெருந்தோட்டப் பயிராக வளர்க்கலாம் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக பருத்தித்துறை மாமுனையில் 500ஏக்கரிலும், மட்டக்களப்பு பிள்ளையாரடியில் 50 ஏக்கரிலும் பனைமரப் பெருந்தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பன்னெடுங்காலமாகப் பனம் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் இருந்து வந்த கஷ்டங்

[8-ம் பக்கம் பார்க்க]

கலாநிதி சு. மோகனதாஸ்

# இலங்கை இனப் பிரச்னை ரஜீவ் நாடு திரும்பியதும் தொடர்ச்சியான பேச்சுகள்



(வாஷிங்டன்)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக அண்மையில் புதுடில்லியில் இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விபரங்களை இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ்காந்தி அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனிடம் விபரித்துள்ளார்.



இந்தியா அயல்நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகள் தொடர்பாக இந்தியப்பிரதமர் அமெரிக்க ஜனாதிபதிக்கு விளக்குகையிலேயே, இலங்கை இனப்பிரச்னை தொடர்பான கருத்துக்களை அவர் அமெரிக்க ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை விரைவில் சுமுகமான முறையில தீர்த்துவைக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்த இந்தியப் பிரதமர், தான் தாய் நாடு திரும்பியதும் இலங்கைத் தமிழர் பிரச்னையை விரைவில் தீர்த்துவைப்பதற்காக அடுத்த சில வாரங்களில் அந்த நாட்டுடன் தொடர்ச்சியான பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தலைமன்னார் - இராமேஸ்வரம் படகுசேவை மீள் பரிசீலனை

(சென்னை)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே 80 ஆண்டுகால நடைபெற்று வந்த இராமேஸ்வரம்- மன்னார் படகுச் சேவை நிறுத்தப்பட்டிருப்பதனை மீள் பரிசிலனை செய்ய வேண்டும் என்று இந்திய உள்துறை இணை அமைச்சர் திரு சந்துலால் சத்துருக்கர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் மண்டபத்தில் நிருபர்கள் மத்தியில் பேசினர்.

படகு போக்குவரத்தை நிறுத்தியதால்ஏற்பட்டு பாதிப்புக்களை இராமேஸ்வரம் மக்கள் தம்மிடம் விளக்கியதாகவும் அவர்களின் கருத்துக்களை தாம் மத்திய அரசிடம் தெரிவிக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மண்டபத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாங்களை பார்வையிட்ட இணை அமைச்சர்; "அகதிகளின் துன்பங்களை பிரதமர் ரஜீவ் காந்தி நன்றாக உணர்ந்துள்ளார் என்றும் இவர்களின் பிரச்னைகளுக்கு விரைவில் நல்லதோர் தீர்வு ஏற்படும் என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.


## கங்கா மினி தியேட்டர்

நாச்சிமார் கோவிலடி (சாந்தி அச்சகம்)

இன்று குதூகல ஆரம்பம்

பிற்பகல் 3-00 மணிக்கு மட்டும்

ஜெமினிகணேசன், சுஜாதா, ஸ்ரீபிரியா நடித்த

**காஞ்சி காமாக்ஷி**

நாளை 15-06-85 சனிக்கிழமை முதல்

தினசரி காலை 10-30, பிறபகல் 2-15

சிவாஜி, பிரபு, ஊர்வசி நடித்த

**நாம் இருவர்**

(ஒறிஜினல் பிரதி)

மாலை 4-45க்கு மட்டும்

**CHALLENGE OF THE NINJA**

(BEST KARATE FILM)

(பயங்கர கராட்டிச் சண்டைகள் நிறைந்த படம்)

தொலைபேசி: 23002. (3790)

## பயங்கரச் சிரமங்கள் மத்தியிலும் தினமும் இரவு பகல் 24 மணியும் சேவை!

இன்றைய பயங்கரச் சூழ்நிலை மத்தியிலும்

**உலகநாடுகள் அனைத்திற்கும்**

உடனுக்குடன் நேரடித் தொடர்

**ரெலெக்ஸ் ரெலிபோன்**

அழைப்புக்கள்

வழமைபோல்

**இரவு பகல் 24 மணி நேரமும்**

எந்நாளும் எந்நேரமும்

பெற்றுத்தருகிறோம்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் நேரங்களில் நாம் வழங்கும் சேவைகள் பற்றிய விபரங்களை அறிய இரவு பகல் எந்நேரமும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

**குளோபல்**

(யாழ். தபாற்கந்தோருக்கு அருகாமையில்)

ரெலிபோன்: 23249 (6 தொடர்கள்)

## மாத்தனைக் கந்தசாமி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் 1985



கொடியேற்றம்: வெள்ளிக்கிழமை 14-06-85 காலை 10 மணி.

சப்பரம்: ஞாயிற்றுக்கிழமை 23-06-85 மாலை 5 மணி

தேர்த்திருவிழா: திங்கட்கிழமை 24-06-85. காலை 8 மணிக்கு வசந்தமண்டப பூசை, காலை 9-30 மணிக்கு தேரில் ஆரோகணித்தல் காலை 10-30 மணிக்குப் பச்சை சார்த்தி ஆறுமுகப்பெருமான் தேரில் இருந்து இறங்கி 11 மணியளவில் வசந்தமண்டபத்தில் ஷண்முக அர்ச்சனை நடைபெறும்.

தீர்த்தம்: செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணி. 25-06-85 மாலை 4-30 மணிக்கு கொடியிறக்கம்.

பூங்காவனம்: புதன்கிழமை 26-06-85 பிற்பகல் 2-00 மணிக்கு ஆரம்பமாகி திருக்கல்யாணம் நடைபெறும்

வைரவர் பொங்கல்: வெள்ளிக்கிழமை 27 06-85 மாலை 4-30 மணிக்கு நடைபெறும்

அன்பர்கள், அடியார்கள் அனைவரும் வந்து கந்தப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வார்களாக.

★ பகல் திருவிழாக்கள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். இரவுத் திருவிழாக்கள் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும்.

இங்ஙனம்

கோவில் பரிபாலன சபையினர்

மாத்தனை, கொக்குவில்,

07-06-85. 3779

# திறமையை வெளிபடுத்த சந்தர்ப்பம் கொடுங்கள்

## கல்வி அதிகாரி வேண்டுகோள்

(மானிப்பாய்)

''மாணவர்களின் ஆற்றல், அறிவு, திறமை இவற்றை வெளிப்படுத்தபாடசாலைகளில் அவ்வப்போது நல்ல சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும். இவ்வித வாய்ப்புக்கள் வழங்கப்படுவதால் மாணவர்கள் கல்வியில் ஊக்கம்பெற்று முன்னேற வழி அமைப்பதாக இருக்கமுடியும்.'

இவ்வாறு மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் யாழ். ஆனைக்கோட்டை றேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை டரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து உரைநிகழ்த்துகையில் கூறினார்.

அதிபர் திருமதி பி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில்; மேற்படி பாடசாலையில் நல்ல ஒத்துழைப்பு எல்லோரிடமிருந்தும் கிடைப்பதாலேயே இது வளர்ச்சியடைந்துவரமுடிகிறது என்றும் இவ்வித சூழ்நிலை மேலும் தொடரவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

சிறப்பு விருந்திலராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய வண. பிதா. பி. எம். இம்மானுவல், எவ்வித கஷ்டங்களுக்கு மத்தியிலும் மாணவர்கள் கல்வியைத்தொடரவேண்டும் என்றும் தரமான கல்வியைப்பெற்றுக்கொள்ள மாணவர்கள் தம்மாலியன்றதனைத்தும்செய்ய முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் அதிபர் திரு. கே. கணபதிப்பிள்ளை பேசுகையில்! மாணவர்கள் மத்தியில் ஒழுக்கமும் கட்டுப்பாடும், இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியம் எனக் குறிப்பிட்டார்.

அதிபர் திருமதி பி. கந்தசாமி பாடசாலை மேலும் வளர்ச்சிபெற கல்வித் திணைக்களத்தினரும் பாடசாலை அபிவிருத்திச் சபையினரும் இன்னும் உதவ முன்வரவேண்டுமெனக்கேட்டுக்கொண்டார்.

ஆசிரியை திருமதி சி. விஸ்வலிங்கம் நன்றி கூறினர்.

பரிசுபெற்றவர்களுக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. தனஞ்சயன் பரிசில்களை வழங்கினா. மாணவ, மாணவியரது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# றமழான் சிந்தனை

தெளபா என்னும் பாவ மன்னிப்பு:

''ஓ விசுவாசிகளே! நீங்கள் எல்லாருமாகத் தெளபா(பாவ மன்னப்பு)ச் செய்து அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். நீங்கள் ஜெயம் பெறலாம்'' சூரா நூர் அ 24-வ 31

''விசுவாசிகளே! நீங்கள் கலப்பற்ற மனத்துடன் பாவத்திலிருந்து விலகி அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். உங்கள் இறைவனே உங்கள் பாவங்களுக்குப் பரிகாரஞ் செய்து (மன்னித்து) சதா நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதியிலும் உங்களைப் புகுத்திவிடுவான்.

அல்குர்ஆன்!

இனி நாயகம்(ஸல்) அவர்கள் பொன் மொழிகளைப் பார்ப்போம்:

''கியாமத் நாளின் அடையாளங்களிலொன்றுன (மேற்றிசை) மஃரிபிலிருந்து சூரியன் உதிப்பதற்கு முன்னமே, ஒருவன் முறைப்படி தெளபா செய்வானுகில் அவனுடைய தெளபாவையும் அங்கீகரிக்கப்படும்''

''ஒருவன் பாவத்தைச் செய்த பின்பு அதைப்பற்றி மனதில் நாணமடைவானுயின் அந்த நாணம் அவன் சுவர்க்கம் போகும் வரை அவன்கண் முன்னேநிற்கும்'' என்று அருளினார்கள்-

''பாவம்செய்தவன்உடனேதெளபாசெய்வதுபர்ளு [கடமை] ஆகும் அவ்விதம் செய்யாவிட்டால் அவன் மீது பாவத்திற்கான குற்றமும், தெளபா செய்யாதற்குள்ள குற்றமுமாக இருகுற்றங்களுக்கு ஆளாகிவிடுவான்''

தெளபாவைப் பற்றிய நாயக வாக்கியங்களையும் பார்த்தோம்! பாவம் செய்யாதவர்கள் மலக்குகள் என்னும் அமரர்கள் மனிதன் தனது ஜீவியத்தில் பாவமில்லாமல் வழிபாட்டில் இருக்க இடமில்லை, மனிதனுடைய ஆரம்பகாலத்தில் பூரணத்துவமான அறிவு இருப்பதில்லை. அவன் வளர வளர சைத்தானுடைய உறவு ஏற்பட்டு அவனின் குணமான இச்சைகளில் ஈடுபட்டு பாவச்செயல்களில் பங்கு கொள்ள இடமேற்படுகிறது. அறிவைக் கொண்டு பினனர் மனிதன் சிந்தித்து தவறுகளையிட்டு உணர்ந்து, கவலை கொண்டு இறைவனையிட்டு பயந்து, உடன் தெளபாவை நாடவேண்டியயேற்படுகிறது. இறைவனும் மனுதனும் மனிதனுடையஇந் நிலையில வைத்துத்தான் தெளபாச் செய்யும்படி வற்புறுத்தி அதை அங்கிகரிக்கின்றுன். மனிதனுடைய சொல், செயல்' நினைவு, பார்வை, கேள்வி இவைகளால் சிறிய பெரிய பாவங்கள் அறிந்தும் அறியாமலும் ஏற்பட்டு அவைகளுக்கும் பரிகாரமாக களங்கமற்ற இருதயத்துடன் பச்சாதாபப்பட்டு இறைவனின் மன்னிப்பு கேட்பதுடன் இனிமேல் பாவங்கள் நிகழாமல் இருக்க பாதுகாவல் தேடுவதுதான் தெளா என்று சொல்லப்படும்.

தெளபாவை அதன் நியமப்படி செய்தால் அது அங்கீகரிக்கப்படும. அது அங்கீ ரிக்கப்பட்டதா என்று நாம் சந்தேகம் கொள்ளக கூடாது. விதிப்படி செய்தோமா என்பதைத்தான் நாம் சிந்தனையில் எடுககவேண்டும்.

அல்லாஹ் தன்னுடைய அடியான் தெளபாச் செய்து தன்னிடம் மீளவேண்டும் என்றதாகவிடாய் கொண்டவன். எனவே அடியான் தெளபாச் செய்வதில் முந்திக்கொள்ள வேண்டும். எவர்கள் பாவங்களைச் செய்து கொண்டேயிருந்து அவர்களுக்கு மரணைச் சம்பவித்தபோது ''இதோ(என் பாவங்களை விட்டு விட்டேன்'' என்று கூறுகின்றுர்களோ அவர்களுக்கு பாவமன்னிப்புக் கிடையாதென்றும் இவாசளுக்கு துன்புறுத்தும் வேதனை தான் சித்தப்படுத்திவைக்கப் பட்டுள்ளது. என்றும் சொலலப்படுகின்றது. என்னேரப் மரணம் வரும் என்று சொல்ல முடியாது. எனவே மனிதன் உடனடியாக தெளபாவைக் கொண்டு தன்னைபபாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் மிகவும் கிருபையுள்ள நாயகன். அடியார்கள் பெலயீனமானவர்கள் என்று அவனுக்கு தெரியும் அவன் ஏவற்படி நாம் நடந்து நம்மை நாம் இம்மைக்கும் மறுமைக்கும் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும்.

தொகுப்பு:-அ. க. அக்பர் ஜின்னு.

# அபிவிருத்தி சபைக்கு பாராட்டு

(மானிப்பாய்)

யாழ். மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது அதிபர் திருமதி இ. காங்கேசு தமதுரையில்: பாடசாலையில் வளர்ச்சிக்கு பெற்ரோரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று எடுத்துக் கூறினார்.

கடந்தவருடம் அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்பு காரணமாக பாடசாலை எல்லை மதில் கட்டிமுடித்தமைக்கு தமது பாராட்டை அவர் தெரிவித்துக்கொண்டார்.

புதுவருட நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திருமதி இ. காங்கேசு, உப தலைவர்: திரு ஏ இரத்தினசபாபதி, செயலாளர் திரு. மா. கந்தசாமி இணைச்செயலாளர் திரு. பொ பொன்னம்பலம், பொருளாளர்: திருமதி. அ. பத்மராசா

ஏழுபேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# ''ஓய்வு நேரங்களில் உதவமுன்வர வேண்டும்''

[மானிப்பாய்]

''தமிழ் மாணவர்களின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது. வருங்காலச் சிற்பிகளான மாணவர்களின் நலன் கருதி ஆசிரியாகள் கடமை நேரங்களில் மாத்திரமின்றி ஒய்வுகாலங்களிலும் சேவையாற்ற முன்வரவேண்டும்''.

இவ்வாறு இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் தமது தலைமையுரையில் எடுத்துக் கூறினர்.

மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையிலேயே திரு. சோதிப்பெருமாள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் பேசுகையில், கிராமத்தின் வளர்ச்சி கல்வியில் தங்கியுள்ளது என்றும், யாழ். மாவட்டத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் கூடிய மாணவர்களைக்கொண்ட மூன்று பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றென்றும், இப்பாடசாலை கிராமப்புறப் பாடசாலையாக இருந்தும் இதன் வளர்ச்சிபற்றிப் பெருமைப் படக்கூடியதாக இருக்கிறதென்றும், இதற்குச் சம்பந்தப்பட்ட எல்லோரது ஓயாத ஒத்துழைப்பே காரணமென்றும் எடுத்துக் கூறினர்.

மானிப்பாய்த் தொகுதி முன்னாள் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ். பிரதேசக்கல்விப்பணிப்பாளர், மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி ஆகியோருக்கும்தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கெண்டார்.

திருவாளர்கள்: தி. விஜயநாதன், இ செ.இலகுநாதன், மு பஞ்சலிங்கம் ஆகியோரும் மற்றும் பலரும் பாடசாலையின் வளர்ச்சிக்கான தமது கருத்துக்களை எடுத்துக் கூறினர்கள்.

பின்வருவோர் புதுவருட உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்; திரு. சோதிப்பெருமாள் ஜே பி., உப தலைவர்கள்: திருவாளர்கள்: தி. விஜயநாதன், த. பாலசிங்கம், செயலாளர்: திரு சி. சண்முகலிங்கம், உப தலைவர் திரு.வி.பரஞ்சோதி, பொருளாளர்: திரு. ஆ. சிவசிதம்பரம்.

21 பேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# திருத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில், தொலைபேசி கேபிள்கள் கொள்ளையடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொலைபேசி தொடர்புகள் திருத்தப் பட்டுள்ளது.

தொலை தொடர்பு இலாகாவினர் நான்கு தினங்கள் திருத்த வேலையில்ஈடுபட்டு பழைய நிலைமைக்கு கொண்டுவந்துள்ளனர்.


மிளகாய் இலைச் சுருளைத் தடுதது
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி ப்யிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2 ஞானர்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல-9
(முன்னாள் மருதானைறேட்) கொழும்பு - 8
தொலைபேசி: 597965—9

Metropolitan



A/L 87

(விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

ஆரம்பம்:
15-06-85
சனி காலை 9-30 மணி

தூய, பிரயோக கணிதம்
திரு. நல்லையா
86, 87 புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 15-06-85
சனிக்கிழமை

(எமது வழமையான ஆசிரியர்கள்)

விபரங்கட்கு:

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, Jaffna.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 2-00, 4-30
THE DAY OF THE JACKAL

**S. T. L. மினிசினிமா**
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, பி.ப.2-30, 4-30
THE NEW BLCK EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**குமரன் மினி**
சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-15
LADY CHATTERLEY'S LOVER
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00, 4-15
Yul Brynner in
POPPY IS A FLOWER
போதைவஸ்துக் கடத்தும் பயங்கரக் கும்பல் ஒன்றை அம்பலமாக்கும் மர்மம், திகில் நிறைந்த சித்திரம்.

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

**ஸ்ரான்லி மினி**
(சினிமா)
5'X5' திரையில்
10-30, 2-15, 4-15
DIVINE EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**சிவன் மினி சினிமா**
K. K. S. ரோட், சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
11-6-85 முதல்
10-30, 12-30, 2-30, 4-30
JULIA
கண்டிப்பாக 18 வயதுக்கு உட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்.

**லிடோ சினிமா**
சுதாகர் - ராதிகா நடித்த
**ஆயிரம் வாசல் இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
16 30, 2-30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)

**மொடேர்ண் மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
**நனா Nana**
இளம் உள்ளங்களை ஏங்க வைக்கும் காதல் காவியம்
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

**நியூசாந்தி (மினி)**
யாழ். சாந்தி சினிமாவில்
10 30, 2-30
சிவாஜி... பண்டரிபாய்... (இரு வேடம்) சுந்தரராஜன் உஷாநந்தினி
**கௌரவம்**
(புதிய பிரதி)

**ஆனந்த வீடியோ சினிமா**
(மனோகராவில்)
தினசரி 10-30, 2-30
பிரகாஷ், சக்கரவர்த்தி, ராஜு ன்ஞ நடித்த
**டீஸ்கோ டான்சர்**
இப்படத்திலிருந்து தழுவி எடுக்கப்பட்ட படம்தான் பாடும் வானம்பாடி
(இந்தி—கலர்)

சாவகச்சேரி

### துர்க்கை அம்மனுக்கு விசேட அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவிலில் இம்மாதம் 26ம் திகதி புதன்கிழமை முதல் அடுத்த மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை வரை 10நாட்கள் தினசரி துர்க்கை அம்பாளுக்குப் பிற்பகல் 3-00 மணி முதல் விசேட அபிஷேகமும் பூஜையும் அம்பாள் திருவீதியுலாக் காட்சியும் நடைபெறும் அடுத்தமாதம் 11ம் திகதி இலட்சார்ச்சனை ஆரம்பமாகி 21ம் திகதி முடிவுறும்.

### வானைத் திருப்பிதருக

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள ஹோம் பினான்ஸ் நிதி நிறுவனத்துக்கு சொந்தமான வானொன்றை கடந்த பெப்ரவரி மாதம் கடத்திச் சென்றவர்கள் அதனை திரும்பவும் தங்களிடம் ஒப்படைக்குமாறு நிறுவனத்தின் முகாமையாளர் பணிவான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

யாழ். நகரிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு புடவை விநியோகம் இந்த வான் மூலமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. வான் கடத்தப்பட்டமையினால் புடவைவிநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் பெரும்பாலான நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இதனால் பொதுமக்களின் நன்மை கருதியும், நிறுவனத்தின் எதிர்கால நன்மை கருதியும் கடத்திச் செல்லப்பட்ட வானை ஒப்படைக்கும்படி அவர்கள் கேட்டுள்ளனர்.

**International Association of Book-keepers (IAB) London**

WEEK-END CLASSES for FOUNDATION, INTERMEDIATE and FINAL and I. A. A. Part I

COMMENCING ON 15-06-85 (TOMORROW)

NOTE:
Student registration with the London Institute will be done by us.

For details contact:

**கன்ரேபியா கல்வி நிறுவனம்**
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி தம்பையா அழகரத்தினம்**

| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 30-10-1900 | 15-05-1985 | 15-06-1985 |

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை துயரிலாழ்த்திப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

மகளும், குடும்பத்தாரும், உறவினர்களும்.
சந்தை வீதி, உடுப்பிட்டி. 3759

**Science Academy**
310, CLOCK TOWER ROAD, JAFFNA.
A/L 87 புதிய பிரிவு
ஆரம்பம்: 15-06-85.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின்**
**பழைய மாணவர் சங்கம்**

எமது பாடசாலையின் இன்றைய நலன் நோக்கி பழைய மாணவர் சங்கத்தைப் புனரமைக்க உத்தேசித்துள்ளோம் மேற்படி சங்கக்கூட்டம் வட இந்து மகளிர் கல்லூரியில் எமக்குரிய பகுதியில் 15-06-85 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

3744 அதிபர்.

உ
சிவமயம்

**முக்கிய அறிவித்தல்**

எனது அன்பார்ந்த வாடிக்கையாளர்க்கு ஆறுமுகம் சக்திவடிவேல் ஆகிய நான் எனதுஇல:115, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை என்ற விலாசத்திலுள்ள அடைவு கடையை 85-ம் ஆண்டு ஆடி மாதம் 16ந் திகதியுடன் மூடிவிடுவதற்குத் தீர்மானித்துள்ளேன். ஆகையால் தயவுசெய்து உங்கள் சிரமத்தைப் பாராது ஆடி 16ந் திகதிக்கு முன்னதாக உங்கள் சகல அடைவு நகைகளையும் மீட்டு எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆ. சக்திவடிவேல்**
இல:115, ஆஸ்பத்திரி வீதி,
ஊர்காவற்றுறை.
3705

**Science Academy**
15, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(புறக்டர், பாலசிங்கம் வளவு)
A/L 86, 87 புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 15-06-85.

| | |
|---|---|
| விலங்கியல்: | தம்பிராசா. |
| தாவரவியல்: | சர்வா-பாலா. |
| பௌதிகம்: | மணியம்-சிறி. |
| இரசாயனம்: | சத்தீஸ். |
| தூய-பிரயோககணிதம்: | வெக்டர் |

(யாழ் இந்து, இந்து மகளீர் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையில்.)

**பேர்லின் பிரயாணம்**

JUNE 17, 21, 25 திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்.

யாழ்-கொழும்பு-பங்கொக் வரை எமது பிரதிநிதி உங்களுடன்.

★ கொழும்பில் தங்குமிட வசதி.
★ பிரயாண காசோலை.
★ பாஸ்போட். பொண்ட், விசா அனைத்துக்கும்

**லிப்ரஸ் லிமிட்டெட்,**
R. G. பில்டிங், 70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

COLOMBO
LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1

# கண்கவர் பனைவளக் கண்காட்சி நேற்று ஆரம்பம்!

[வண்ணார்பண்ணை]

யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது மண்டபத்தில் பனைவள உற்பத்திக் கண்காட்சியை யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் கே குணரத்தினம் நேற்றுக் காலை மங்கள விளக்கேற்றி திறந்துவைத்தார்.

திறப்புவிழாவில் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா, சபை இயக்குனர்கள், சபை பொது முகாமையாளர் கலாநிதி க மோகனதாஸ், சபை உத்தியோகத்தர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

பனை அபிவிருத்தி சபையும், யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்தும் இக்கண்காட்சி இன்றும்' நாளையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்

நாளை சனிக்கிழமை பாடசாலை மாணவர்கள் கண்காட்சியைப் பார்ப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறிய மண்டபமாக இருந்தாலும், கண்காட்சியில் பெருந்தொகையான பனைவள உற்பத்திகள் காணப்பட்டன,

இந்தக்கண்காட்சியைநேற்று திறப்புவிழாவைத் தொடர்ந்து ஏராளமானோர் பார்வையிட்டனர். அங்குள்ள பனஞ்சீனி உற்பத்தி யந்திரத்தில் பனஞ்சீனி உற்பத்தி செய்து காண்பிக்கப்பட்டது.

பனைவள உற்பத்திப் பொருட்கள் அங்குள்ள விற்பனை நிலையத்தில் உடனுக்கு உடன் விற்பனை செய்யப்பட்டன.

பனம்பானம், பனம்பாணி, பனம் ஜாம் ஒடியல்மா புளுக்கொடியல் மற்றும் மனைவள உணவுகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதற்கான செய்முறைப் படங்களும் அருகில் காணப்பட்டன.

அலங்காரப் பொருட்கள் ஏற்றுமதிக் கைப்பணிப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், நவீனமயமான கைப்பணிப் பூக்கள், சுவர் அலங்காரங்கள், கைப்பிரம்புகள் மற்றும் பனை ஓலை, கடகம், பெட்டி பாய்வகைகளும் சிறுபிள்ளைகளுக்கான தொப்பிகள், கைப்பைகள் ஆகியவையும் இக்கண்காட்சியில் இடம் பெற்றன. (வண் நிருபர்)

## பனைவளம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

களே பனம் பொருள் அபிவிருத்திகருத் தடையாக இருந்துவந்தன இதனைக் கருத்திற்கொண்டு பனை அபிவிருத்திச் சபை கடந்த ஐந்து வருட காலத்திலும் சந்தைப்படுத்தலிலும், பனம் பொருட்களில் மக்கள் அதிக ஆர்வம் கொள்ளச் செய்வதிலும் முக்கியத்துவம்அளித்துவருகின்றது. சபையின் கற்பகம் விற்பனை நிலையங்கள் கொழும்பு. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பனைப் பயிர்ச்செய்கை, உற்பத்தி, அபிவிருத்தி ஆகியவற்றைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது பாரிய அளவில் ஆராய்ச்சிகளைமேற்கொள்ளும் முகமாக பிரதேச அபிவிருத்தி அமைச்சும், பனை அபிவிருத்திச் சபையும் கைதடியில் பனைவள ஆராய்ச்சி நிலயத்தை உருவாக்கத் துரிதநடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. ஐநா அபிவிருத்தித்திட்ட உலக உணவு விவசாய நிறுவன சபையுடன் இணைந்து 1983ம் ஆண்டு நடாத்திய தொழிற்பாட்டு மகாநாட்டின் பெறுபேருக இந்த ஆராய்ச்சி நிலயத்திற்கு வேண்டிய உபகரணங்களை வநிங்க உலக உணவு விவசாய நிறுவனம் முன்வந்துள்ளது.

வவனியா மாவட்டத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் கைப்பணிப் பயிற்சி நிலயங்கள், மாதிரிப் பண்ணைகள் அமைக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளன ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்தில் பனைவள அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது. தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுடனுன உற்பத்தி. சந்தைப்படுத்தல் தொடர்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. பனம் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கையாகச் சாவகச்சேரியிலும் பருத்தித்துறையிலும் ஏற்றுமதி உற்பத்திக் கிராம (மக்கள்) கம்பனிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கம்பனி மூலம் கடந்த வருடம் ஜப்பானுக்குப் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்து வருடங்களில் சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ''பனையை வளர்ப்போம், பயன் பெறுவோம்''

## விளையாட்டரங்கில்..

(1-பக்கத் தொடர்ச்சி)

தாகவும் நண்பகலுக்கு முன் அங்கு திரண்டிருந்த சகலருக்கும், ஒய்வுதியம் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## குருநகர்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நனைந்த சீனியும், 4000 கிலோ கிராம் பாவிக்கமுடியாத கழிவு மாவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக்களஞ்சியத்தில் 10,500 மூடை அரிசி இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அரிசி மூடைகளைத் திரும்ப ஒப்படைக்குமாறு விடுத்தவேண்டுகோளைத் தொடர்ந்து சில மூடைகள் ஒப்படைக்கப்பட்டதாகவும், ஆயுதப்படையினரால் சில மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இக்களஞ்சியத்தில் மிஞ்சியிருந்த சகல அரிசி மூடைகளும் நாவற்குழி உணவுக் களஞ்சியத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. (க)

## கொள்ளைகளைக்...

[1ம் பக்கத்தொடர்ச்சி]

பலதடவைகள் இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட கொள்ளைச் செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இம்முறைகேடான செய்கையால் எமது தொழிற்சாலை பெரிதும் பாதிக்கப்படுவதுடன் ஏறத்தாழ 3000 ஊழியர்களும் அவர்களின் குடும்பங்களும், சிமெந்துத் தொழில் செய்து பிழைக்கும் பல்லாயிரம்ஏழைத் தொழிலாளர் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

''இதுபோன்ற மனிதாபிமானமற்ற சமூக விரோதச் செயலைக் கைவிடும்படியும், அபகரிக்கப்பட்ட தொழிலக வாகனங்களையும், மற்றும் உடைமைகளையும் திருப்பி ஒப்படைக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்'' என்று சிமெந்துத் தொழிற்சாலைப் பொதுத் தொழிலாளர் யூனியன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஈரற்பெரியகுளம்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் உயிரிழப்புக்களோ, அல்லது பொருட்சேதங்களோ ஏற்படவில்லையென்றும், அச்சத்தின் காரணமாகவே அம்மக்கள் இராணுவ முகாமில் தஞ்சமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இடபதற்றநிலையையடுத்து நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற சில தனியார் பஸ்வண்டிகள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவிட்டன. ஒரு சில மட்டுமே கொழும்பு சென்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## லலித்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லத்முதலி பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனிக்கும் பொருட்டு நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தார் அமைச்சருடன் மேஜர் ஜெனரல் நளின் செனவிரத்னவும் வந்திருந்தார்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி யாழ். அரசாங்க அதிபரையும் சந்தித்து யாழ் மாவட்டத்திலுள்ள பிரச்னைகள் குறித்து ஆலோசனை நடத்தினர். (மா)

## சுவிஸ்ஸில்—

மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது

சுவிற்சர்லாந்திலுள்ள அந்த ஆற்றில் வேறுசில நண்பர்களுடன் குளிக்கச்சென்ற இந்நபர் ஆற்றுடன் அள்ளுண்டு சென்றதை அங்குள்ள அவரது உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

## தாயகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக இலங்கை அதிகாரிகளுடன் எத்தகைய பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற கேள்விக்கே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்கள் பாதுகாப்பாகத்திருப்பி அனுப்பப்படுவது தொடர்பாகக் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம், இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## பொங்கல்

[நயினாதீவு]

நயினாதீவு தில்லைவெளி ஸ்ரீ பீடாதி அம்பாள் ஆலய வருடாந்த வேள்விப் பொங்கல் நாளை காலை நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தின் நித்திய பூசைகள் சில நாட்கள் தடைப்பட்டிருந்தும், விசேட சாந்தி, கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. (கெ)

## இவர்களுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாக ஒய்வூதியம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிட்ட திகதியில் ஒய்வூதியம் பெருதவர்களுக்கு பின்னர் ஒய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது.

சிவில் பென்சன் பட்டியல் 1 முதல் 135 இலக்கம் உள்ளவர்களுக்கு நாளை சனிக்கிழமை (15-ந் திகதி) காலை 9 மணி முதல் 12 மணி வரையும் வழங்கப்படும்.

பட்டியலில் 136 முதல் 161 இலக்கம் உள்ளவர்களுக்கு 17-ந் திகதி காலை 9 மணி முதல் 11 மணி வரையும் வழங்கப்படும்.

விதவை, அனாதை ஒய்வூதியம் பெறுவோருக்கு 18-ந் திகதி காலை 9 மணி முதல் 11 மணி வரை ஒய்வூதியம் வழங்கப்படும். ஆசிரியர், ஆயுதப்படையினருக்கான ஒய்வூதியம் 19-ந் திகதி காலை 9 மணி முதல் 11 மணி வரை வழங்கப்படும். [க]

# வெளிமாவட்டங்களிலிருந்து பெற்றேல் டீசல் கொண்டுவர தனியாருக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வாகனச் சொந்தக்காரர்கள் சொந்தப் பாவனைக்கு 10 லிட்டர் டீசல் அல்லது 10 லிட்டர் பெற்றேல் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவருவதற்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாட்டை ஓரளவு தீர்க்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்

ஒரு வாகனச் சொந்தக்காரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஒருவரினால் பிற மாவட்டங்களிலிருந்து மேற்குறிப்பிட்ட அளவு பெற்றேல் அல்லது டீசல் கொண்டுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாகனச் சொந்தக்காரர் 85-ம் ஆண்டுக்குரிய உரிமைச் சான்றிதழும், அவரது அடையாள அட்டையுடன் சென்று கொள்கலனில் தமக்குரிய எரிபொருளைக் கொண்டுவரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மின்கம்பத்தில் ஆசிரியையின் சடலம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திரேசா வித்தியாலயத்துக்கு முன்னால் உள்ள தந்திக் கம்பமொன்றில் தலையில் துப்பாக்கி சூட்டுக்காயத்துடன் இளம் ஆசிரியை ஒருவரின் சடலமொன்று கட்டப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு கல்லடி கொலனியைச் சேர்ந்த ஞானம்மா (வயது 38) என்னும் இவர் ஆறுபிள்ளைகளின் தாயும் பாலர் பாடசாலையின் ஆசிரியையுமாவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ரா)

## எதிர்க்கட்சி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னுக்கு பணிப்புரை ஒன்றை விடுத்திருக்கின்றார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் திரு. சூசைதாசன் தமிழகம் வரும்படியும் பணிக்கப்பட்டிருக்கிறார்.

இதேவேளை கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

தமிழகத்திலுள்ள கூட்டணித்தலைவர்கள் இதில் கலந்துகொள்வதற்கென எதிர்வரும் மாதம் இலங்கை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ரயில் சேவை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செலுத்தி ரசீது பெற்று, அதனை யாழ். ரயில் நிலையத்தில் கொடுத்து டிக்கற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ரயில்வே வாறண்ட் உள்ளவர்கள் நேரடியாக யாழ் ரயில் நிலையத்தில் வாரண்டைக் கொடுத்து டிக்கற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்தேவி நண்பகல் 1-25 மணிக்கு யாழ் ரயில் நிலயத்தை வந்தடைந்து பிற்பகல் 2-10 மணிக்கு புறப்படும். (க)

## வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட அறிஞர்களுக்கிடையிலான இச்சந்திப்பில் இந்திய அரசியலமைப்பிலுள்ள மாநில அரசமைப்புக்கள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திரு. எச். டபிள்யு ஜயவர்த்தன தலைமையிலான இலங்கைக்குழு தாயகம் திரும்பியதும் இந்தியாவில் நடத்திய ஆலோசனைகள் குறித்து விரிவான அறிக்கையொன்றை இலங்கை அரசுக்கு சமர்ப்பிக்கும்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சிரேஷ்ட சட்ட அறிஞர்களுடனும் இந்திய சட்ட நிபுணர்கள் விரிவான பேச்சுக்களை மேற்கொள்வார்கள் என்று கூறப்படுகிறது. [கி]

## நவம் தலைமையில் கூட்டணிக்குழு ஐரோப்பா பயணம்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் படும் கஷ்டங்களை நேரில் கண்டு ஆராய்வதற்காக திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் குழு ஒன்று ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யுப்.

சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு இந்தக்குழு விஜயம் செய்யும்.

## மட்டக்களப்பு பாடசாலைகள் பகிஷ்கரிப்பு!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் யாவும் நேற்று முழுநாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

பாதுகாப்புப் படையினரால் ஆசிரியர்களும், மாணவர்களும் காரணமின்றித் தாக்கப்பட்டு வருவதினாலேயே இப்பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டதாகவும் இன்று வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ரா]

## கொள்ளை

(கொழும்புத்துறை)

புன்னாலைக்கட்டுவனில் தனியாருக்குச் சொந்தமான நெசவாலையொன்றில் நேற்றுமுன்தினமிரவு நெசவாலைக் களஞ்சியம் உடைக்கப்பட்டுச் சுமார் 15.000 ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக யாழ் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## திருமலை வன்முறைகளில் 16 ஆயிரம் அகதிகள்

[கொழும்பு]

திருகோணமலை மாவட்டத்தில் சமீபகாலத்தில் நடந்த வன்செயல்களினால் 11 ஆயிரம் பேர் பதினாறு முகாம்களில் தங்கியுள்ளார்களென்றும், இவர்களில் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் ஆகிய முப்பகுதியினரும் அடங்குவர் என்றும் அரசுதரப்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை இச்சம்பவத்தில் ஐந்து பாதுகாப்புப்படையினர் உட்பட இருபது பேர் பலியாகியுள்ளதாகவும், திருகோணமலை தாக்குதல்கள் யாவும் தமிழீழ விடுதலைப்புலிகளால் நடத்தப்படுவதாகவும் தெரிவித்த அந்தசெய்தி இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண வழிவகுக்கும் விதத்தில் தாக்குதல்களை நிறுத்த உடன்பட்டுள்ள ஏனைய குழுக்களுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் இணைய மறுத்து வருவதாகவும் தெரிவித்தது. (ரா)

இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோலின் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu P. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126.